# நமது மகாராஜாவாகிய இயேசுவுக்குக் கீழ்ப்படிதல்

**விசுவாசிகளாகிய நாம் இயேசுவை நேசிப்பதால்**
**அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிகிறோம்.**

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் F3b யை வாசிக்கவும்.

**ஜெபம்:** கர்த்தராகிய இயேசுவே! நீர் எங்களுக்காக மரித்து, உயிர்த்தெழுந்து, மகிமைக்குள் எழுந்தருளினீர். நானும் எனது மந்தையும் உம்மை நேசிக்கிறோம். உமது கற்பனைகளுக்கு கீழ்ப்படிவதின் மூலமாக அன்போடு சேவை செய்ய எங்களுக்கும் போதியும்.

## 1. கீழ்ப்படிதலைப் பற்றிப் போதிக்க, ஜெபத்தோடும் வார்த்தையோடும் உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.

கீழ்ப்படிதல் எவ்வாறு உங்கள் மந்தையைப் பலப்படுத்தும் என்பதையும், பாடுகள், துன்பங்கள், புறக்கணிப்புகள் மத்தியில் அவர்கள் எழுந்து நிற்க எவ்வாறு உதவும் என்பதையும், **ஸ்தேவானின் வரலாறு மூலம் கற்றுக்கொள்க.** தாம் செய்ததற்கு சாட்சிகளாக இருக்கும் படி இயேசு சொன்ன கட்டளைக்கு கீழ்ப்படிந்து தியாக மரணம் அடைந்த முதல் விசுவாசி ஸ்தேவானே (அப்.1:8).



**அப்.7:54-8:8ல் காண்க:**

- தேவ ஆசீர்வாதம் ஸ்தேவானை நிரப்பியது.
- அவனால் பார்க்க முடிந்தது என்ன.
- அவன் எதைக் குறித்து சாட்சி கொடுத்தான்.
- அவன் என்ன ஜெபித்தான்.
- சென்ற இடங்களில் எல்லாம் விசுவாசிகள் செய்தது என்ன?

**யோவான் 14:15-21 ல் காண்க.**

- இயேசுவின் மேல் உள்ள அன்பை விசுவாசிகள் எவ்வாறு காட்ட வேண்டும்?
- இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிபவர்களுக்கு வரும் நன்மைகள்.

**எபிரேயர் 5:8-9 ல் காண்க:**

- இயேசு தாமே எவ்வாறு கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்?
- இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிபவர்களுக்கு வரும் நன்மைகள்.

**1 யோவான் 2:3-4 ல் காண்க:**

- நாம் இயேசுவை அறிந்து கொண்டுவிட்டோம் என்பதை எவ்வாறு நிச்சயம் செய்வது.
- இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிபவர்களுக்கு வரும் நன்மைகள்.

**1பேதுரு 1:2 ல் காண்க:**


- தேவன் நம்மை அவருக்கு சொந்தமானவர்களாக தெரிந்து கொண்டார் என்பதை நாம் எவ்வாறு உறுதிசெய்ய முடியும்?
- இயேசுவின் கற்பனைகளுக்கு கீழ்ப்படிபவர்களுக்கு வரும் நன்மைகள்.

**அப்.5:27-32ல் காண்க:**

- எதிரான அதிகாரிகளை உண்மையாக எதிர்கொள்ளும் தைரியத்தை நாம் எவ்வாறு பெறுவது?
- இயேசுவின் கற்பனைகளுக்கு கீழ்ப்படிபவர்களுக்கு வரும் நன்மைகள்.

**மத்.28:16-20 ல் காண்க:**

- இந்த இறுதிக் கட்டளையை இயேசு எவ்வளவு அதிகாரத்தோடு தந்தார்?
- இயேசுவின் சீஷர்களாக மற்றவர்களை ஆக்குக. உதவுவதற்கு இயேசு எவ்வாறு கட்டளை இட்டார்?
- இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுமாறு மற்றவர்களுக்கு உதவுவோருக்கு வரும் நன்மைகள்.



**1 பேதுரு 1:13-22 ல் காண்க.**

- இந்த உலகத்தில் கீழ்ப்படிதல் உள்ள கிறிஸ்தவர்கள் எவ்வாறு தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர்?
- இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவோருக்கு வரும் நன்மைகள்.

**வெளி.14:12-13ல் காண்க.**

- இறுதிவரை இயேசுவுக்கு உண்மையாய் கிறிஸ்தவர்கள் எவ்வாறு இருக்க முடியும்?
- இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவோருக்கு வரும் நன்மைகள்.

எருசலேமில் இருந்த புதிய விசுவாசிகள் உடனடியாக கைக்கொண்டு ஒழுகிய சில இயேசுவின் கற்பனைகளை கீழே இடது புறத்தில் பட்டியல் இடப்பட்டுள்ள வசனங்களில் **காண்க.** (அப்.2:38-47). ஒவ்வொரு வசனத்தையும் அதற்கு சம்பந்தப்பட்ட செயல்பாட்டையும் (வலதுபுறம்) கோடிட்டு பொருத்துக.

| | |
|---|---|
| லூக். 22:19-20 | அன்பான அந்நியோந்நியம் |
| யோவான் 13:34 | அப்பம் பிட்குதல் |
| லூக். 6:38 | ஞானஸ்நானம் |
| மத். 28: 19-20 | இயேசுவின் நாமத்தில் ஜெபம் |
| யோவான் 16:24 | தாராளமாகக் கொடுத்தல் |

## 2. உடன் ஊழியர்களுடன் வரும் வாரத்திற்கான நடவடிக்கைகளை திட்டமிடுக.

தற்போதைய தேவைக்கு ஏற்ற செயல்களை தேர்ந்தெடுக்கவும். ஒருவேளை நீங்கள்.....

- தங்கள் விசுவாசத்தின் காரணமாக சிறையில் பாடுபட்டுக் கொண்டிருக்கும் விசுவாசிகளை சந்தித்து, பகுதி 1 ல் உள்ள வேதாகமம் வசனங்களைக் கூறி ஊக்கப்படுத்தலாம்.
- உங்களை துன்புறுத்துவோரின் பெயர்களை அறிந்து அவர்களுக்காக ஜெபியுங்கள். கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்து தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தும்படி வேண்டவும்.
- பாடுகளை விசுவாசிகள் எவ்வாறு தாங்கிக் கொண்டனர் என்பதையும், இயேசுவுக்கு எப்போதும் கீழ்ப்படிதல் உள்ளவர்களாய் இருப்பதை எவ்வாறு போதிக்க முடியும் என்பதையும் விவாதிக்கவும். ஒன்றாக நேரத்தை செலவழித்து, கர்த்தரை துதித்து, எப்போதும் உண்மை உள்ளவர்களாய் இருக்க பலத்தைத் தருமாறு ஜெபியுங்கள்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

தற்போதைய தேவைக்கும் அந்தந்தப் பகுதி சம்பிரதாயங்களுக்கும் ஏற்ற **செயல்பாடுகளைத்** தெரிந்துகொள்க.

அப். 7:51-8.8 ல் உள்ள ஸ்தேவானின் தியாக மரணத்தை விவரிக்கலாம் அல்லது நடிக்கலாம்.

பகுதி 1 ல் பட்டியல் இடப்பட்டுள்ள சில வேத வசனங்களை விசுவாசிகளோடு மீள்பார்வை செய்க. நீங்கள் அறிந்து கொண்டதைக் குறித்து கேள்விகள் கேட்கவும் அவர்களைப் பேசும்படி ஊக்கப்படுத்துங்கள். அவர்கள் சரியான பதில்களைக் தரவில்லை என்றால், அவர்களுக்கு சரியான பதிலைச் சொல்லவும்.

கடந்த மாதத்தில் இயேசுவின் சில கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்ததின் மூலமாக அடைந்த ஆசீர்வாதத்தைக் குறித்து சாட்சிகளைத் தருமாறு விசுவாசிகளைக் கேளுங்கள்.

**சிறுவர்கள்** தாங்கள் தயாரித்த நாடகம் மற்றும் தாங்கள் வாசித்தறிந்தவற்றைப் பெரியவர்களுக்குக் கூறலாம்.

வெளி. 19:5-10 ல் உள்ள ஆட்டுக்குட்டியானவரின் திருமண விருந்தை வாசித்து கர்த்தரின் பந்தியை ஆசரிக்கலாம். இந்த பூமிக்கு இயேசு வருவதையும். நாம் அவரோடு பகிர்ந்து கொள்ளப் போகும் பெரிய விருந்தையும் எதிர்நோக்கத் கர்த்தரின் பந்தி நமக்கு உதவி செய்கிறது என்பதை விளக்குக.



ஒருவருக்கொருவர், தேவைகளையும் கவலைகளையும் குறித்து கேட்கவும், ஊக்கப்படுத்தவும், இயேசுவுக்குக் கீழ்ப்படிகிறவர்களாய் இருக்க ஜெபிக்கவும், விசுவாசிகளின் எதிரிகளுக்காகவும் அவர்களைத் துன்புறுத்துகிறவர்களுக்காகவும் ஜெபிக்கவும். **சிறிய குழுக்களை** அமைக்கவும்.

**மனன வசனம்** ரோமர் 6:17-18.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net